**1. பழங்குடியினர் நல மாணவர், மாணவியர் விடுதிகள் கட்டுதல்.**

பழங்குடியின மாணவ, மாணவியர் அவர்களது வாழ்விடங்களை விட்டு கல்வி பயிலும் பள்ளிகளின் அருகே பாதுகாப்புடன் தங்கி கல்வி பயில ஏதுவாக **மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியோடு,** திருச்சி மாவட்டம் துறையூரில் 100 மாணவியர் தங்கி படிப்பதற்காக ரூ.2.30 கோடி மதிப்பில் ஒரு விடுதியும், செங்காட்டுப்பட்டியில் 200 மாணவர் தங்கி படிப்பதற்காக ரூ.3.60 கோடி மதிப்பில் ஒரு விடுதியும் ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்ட நிதியின் கீழ் கட்டுவதற்கு **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்** அனுமதி அளித்துள்ளார்கள்.

**2. முனைவர் ஆராய்ச்சி படிப்பு (Ph.D.) நிதி உதவி.**

முழுநேர முனைவர் பட்ட ஆராய்ச்சிப் படிப்பை முதலாம், இரண்டாம், மூன்றாம் மற்றும் நான்காம் ஆண்டுகளில் பயிலும் 700 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணாக்கர்களுக்கு 2013–2014 ஆம் கல்வியாண்டு முதல் தலா ரூ.50,000/– வீதம் ஊக்கத்தொகை அரசால் வழங்கப்பட்டு வருகிறது. **மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியோடு,** இந்த எண்ணிக்கையினை 1200 ஆக அதிகரிக்க **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்** அனுமதி அளித்துள்ளார்கள். இத்திட்டத்திற்கென தொடரும் செலவினமாக கூடுதலாக ரூ.2.50 கோடி மாநிலத் திட்ட நிதியிலிருந்து செலவிடப்படும்.

**3. ஏகலைவா மாதிரி உண்டி உறைவிடப் பள்ளி துவங்குதல் மற்றும் அப்பள்ளிக்கு கட்டடம் கட்டுதல்**

இத்துறையின் கீழ் 310 அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளும், 4 ஏகலைவா மாதிரி பள்ளிகளும் இயங்கி வருகின்றன. பழங்குடியின மாணாக்கர்களின் கல்வித் தரத்தை முன்னேற்றும் வகையிலும் பாதுகாப்புடன் தங்கிப் பயில ஏதுவாகவும் **மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியோடு,** நாமக்கல் மாவட்டத்தில் ஒரு ஏகலைவா மாதிரி உண்டி உறைவிடப் பள்ளி அரசியலமைப்பு சட்டக் கூறு 275(1) இன் கீழ் ரூ.1.65 கோடி மதிப்பில் துவங்கவும் அப்பள்ளிக்கு கட்டடம் கட்டவும் **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்** அனுமதி அளித்துள்ளார்கள்.

**4. பழங்குடியின விவசாயிகளுக்கு துரித மின் இணைப்பு திட்டம்.**

பழங்குடியின விவசாயிகளின் வாழ்வில் விவசாயத்தின் வாயிலாக மலர்ச்சியையும், முன்னேற்றத்தினையும் உருவாக்கும் பொருட்டு அந்த விவசாயிகள் துரிதமாக மின் இணைப்பு பெறுவதற்கு ரூ.75,000/– வீதம் 100 பேர் பயன்பெறுவதற்காக **மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியோடு,** ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.75 இலட்சம் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கு வைப்பீடு தொகையாக வழங்குவதற்கு **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்** அனுமதி அளித்துள்ளார்கள்

**5. பழங்குடியின மக்களுக்காக இரண்டு  சமுதாயக் கூடங்கள் கட்டுதல்.**

பழங்குடியின மக்கள் தங்கள் வீட்டு சுபநிகழ்ச்சிகளை அனைத்து வசதிகளுடன், மகிழ்ச்சியாக மிகச் சிறப்பாக கொண்டாடும் வகையில் **மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியோடு,** திருச்சி மாவட்டம், பச்சமலை மற்றும் தென்புறநாட்டில் ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்ட நிதியின் கீழ் தலா ரூ.50 இலட்சம் மதிப்பில் இரு சமுதாயக் கூடங்கள் கட்டுவதற்கு **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்** அனுமதி அளித்துள்ளார்கள்.

**6. பழங்குடியினர் நலத்திட்டங்களைப் பற்றிய இணையதளம் ஏற்படுத்துதல்.**

பழங்குடியின மக்கள் மேம்பாட்டிற்கான திட்டங்களின் செயல்பாட்டினை கண்காணிக்கவும், வாழ்வாதார முன்னேற்ற நடவடிக்கை திட்டங்களுக்கான விண்ணப்பங்களை இணையதளம் வாயிலாக விண்ணப்பிக்கவும், புள்ளி விவரங்களை சேகரிக்கவும், ஒருங்கிணைக்கவும் அடுத்த பத்தாண்டுகளில் பழங்குடியின மக்கள் அனைவரும் இணையதளம் வாயிலாக பயனடையும் வகையில், **மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியோடு,** ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.85,000 மதிப்பில் ஓர் இணையதளம் உருவாக்குவதற்கு **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்** அனுமதி அளித்துள்ளார்கள்.

**7. பள்ளிகளை நிலை உயர்த்துதல்.**

இத்துறையின் கீழ் இயங்கும் ஆரம்ப, நடுநிலை மற்றும் உயர்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணாக்கர்கள் உயர்கல்வி பயில தங்களது இருப்பிடத்திலிருந்து நீண்ட தூரத்தில் உள்ள பள்ளிகளுக்குச் சென்று பயிலும் நிலை உள்ளது. எனவே, **மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியோடு,** கீழ்க்காணும் பள்ளிகள் நிலை உயர்த்தப்படும்.

| | |
|---|---|
| (அ) | ஐந்து அரசு பழங்குடி உண்டி உறைவிட ஆரம்பப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்துதல்<br><br>சேலம் மாவட்டம்<br>(i) தாழ்வள்ளம்<br>(ii) புதூர்<br>(iii) சூலாங்குறிச்சி<br>(iv) ஆலடிப்பட்டு<br>(v) தாத்தியம்பட்டி ஆகிய பள்ளிகள் |
| (ஆ) | நான்கு அரசு பழங்குடி உண்டி உறைவிட நடுநிலைப் பள்ளிகள் மற்றும் ஓர் ஆதி திராவிடர் நல நடுநிலைப் பள்ளி ஆகியவற்றை உயர்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்துதல்<br><br>சேலம் மாவட்டம்<br>(i) கொடுங்கல்<br>(ii) குன்னூர்<br>(iii) அடிமலைபுதூர்,<br>ஈரோடு மாவட்டம்<br>(iv) கொங்காடை<br>திருவள்ளூர் மாவட்டம்<br>(v) வளசரவாக்கம் ஆகிய பள்ளிகள் |
| (இ) | இரண்டு உண்டி உறைவிட உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் இரண்டு ஆதி திராவிடர் நல உயர்நிலைப் பள்ளிகள் ஆகியவற்றை மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்துதல்<br>சேலம் மாவட்டம்<br>(i) அருநூத்துமலை<br>(ii) கரியகோயில் வளவு<br>நாகப்பட்டினம் மாவட்டம்<br>(iii) மாதானம்<br>திருவள்ளூர் மாவட்டம்<br>(iv) தேர்வாய் ஆகிய பள்ளிகள் |

மேற்குறிப்பிட்ட 14 பள்ளிகளையும் ரூ.14.06 கோடி மதிப்பில் மாநில திட்ட நிதியின் கீழ், நிலை உயர்த்த **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்** அனுமதி அளித்துள்ளார்கள்.